[1967 ஜூன் 20

திரு. மு. ச. சிவசாமி: தியாகிகளுக்கு மானியமாகக் கொடுத்த நிலத்தை விற்கலாமா? அப்படி விற்றிருக்கிறார்கள் என்றால் விற்றவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்து அந்த நிலத்தை மீண்டும் சர்க்கார் உடைமையாக்கிக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தியாகிகளுக்குத் தரப்படுகிற நிலத்தை விற்கக் கூடாது என்பதுதான் விதி. பல விதிகள் மீறப்படுவதைப் போல் இதிலும் சிலர் விதிகளை மீறியிருக்கலாம். அது அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அதுபற்றி விசாரணை நடத்துவதற்கு ஏதுவாகயிருக்கும்.

திரு. முனு. ஆதி: வைக்கம் வீரர் பெரியார் அவர்களுக்குத் தியாகிகள் நிலம் கொடுக்க முந்திய அரசாங்கம் முன்வந்ததா? அப்படி இல்லை என்றால் நம் அரசாங்கமாவது கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இந்த அரசாங்கம் அமைந்த பிறகு தியாகிகள் நிலம்தான் பெரியார் அவர்களுக்குத் தரவேண்டும் என்பதல்ல. இந்த அமைச்சரவையே அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிற பரிசுதான்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: தியாகிகள் நிலங்களைப் பலர் ஆக்கிரமித்து தியாகிகளை அந்த நிலங்களுக்குப் போக விடாமல் செய்திருக்கிறார்கள். அதுபற்றி இந்த அரசு தனிக் கவனம் செலுத்துமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: யாருடைய நிலத்தை யார் ஆக்கிரமித்தாலும் அது அறிவிக்கப்பட்டால் அதற்கான நடவடிக்கைகள் நிச்சயம் எடுக்கப்படும்.

திரு. வ. ஜார்ஜ்: சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு அளிக்கும் சலுகைகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் போராட்டத் தியாகிகளுக்கும், அந்தப் போராட்ட சமயத்தில் அவர்களுக்கு ஆக்கம் அளித்திருக்கும் இந்தச் சர்க்கார் கட்சியினரின் அரசு அச்சலுகைகளை அளிப்பதற்குரிய திட்டமுண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இத்திட்டம் விடுதலைப் போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றியது. திருவிதாங்கூர் அரசை எதிர்த்து விடுதலைப் போராட்டம் நடத்தியவர்கள் இந்தப் பட்டியலின் கீழ் வரவேண்டும் என்று கருதுவார்களானால் அது பற்றித் தனியாக யோசித்து முடிவு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்வி, 35.

(2) ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி)

(இ) மூல வினா கேட்டிருக்கும் உறுப்பினருக்கு துணை வினாக்கள் கேட்கச் சலுகை.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார், நான் இரண்டு கேள்விகள் போட்டிருக்கிறேன்.

ஓரே ஒரு உப கேள்வி போட தாங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். தலைவர் அவர்களுக்கு நாங்கள் மிகவும் மரியாதை கொடுத்து மிகவும் கட்டுப்பட்டு நடக்கிறோம். கேள்வி நேரம் என்பது மிகவும் முக்கியமானது. ஒருவர் வேட்டையாட ஆரம்பித்தால் தொடர்ந்து அவர் வேட்டையாடிய பிறகு மற்றவர்களுக்கு களுக்கு விடவேண்டும் என்பதுதான் முறை. கேள்விக் கணை கொடுத்தவருக்கு முதலில் சலுகை கொடுத்த பிறகு மற்றவர் களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் தலைவர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: திரு. கோதண்டராமன் அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை நியாயமானது. விதிகளின்படி யார் கேள்வி கேட்கிறாரோ அவருக்குத் துணைக் கேள்விகள் கேட்க உரிமையுண்டு. இரண்டு கேள்விகளை நாம் ஒன்றாக எடுத்துக் கொண்ட காரணத்தினால் ஒரு துணைக் கேள்வியைக் கேட்க அனுமதித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களை மீண்டும் ஒரு துணைக் கேள்வி கேட்கும்படி அனுமதிக்கிறேன்.

1. வினாக்கள்—விடைகள் (தொடர்ச்சி)

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்தத் தியாகிகளுக்குப் பென்ஷன் கொடுக்கக்கூடிய விதியிலே வருவாய் சம்பந்தப்பட்ட, பிரச்சினையில் இன்றைக்கு ஒரு விதி இருக்கிறது. ஒரு குடும்பத்திலே தியாகியினுடைய நெருங்கிய உறவினருடைய வருவாய்கூட கணக்கில் எடுக்கப்படுகிறது. இந்தக் காலத்திலே பிள்ளைகூட தகப்பனுக்குச் சோறு போடுவதில்லை, அவர் அவர்பாட்டுக்குப் போவார், இவர் இவர்பாட்டுக்குப் போவார். இப்படிப்பட்ட நிலையில் நெருங்கிய உறவினர் வருவாயைக் கணக்கில் எடுக்காமலும், அதேபோன்று சட்டசபையின் எம்.எல்.ஏ., எம்.பி. போன்றவர்களுடைய சம்பளமும் ஸ்காலர்ஷிப் போன்றவற்றிற்கு அலவன்ஸாகத்தான் எடுத்துக்கொள்ளப்படுகிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேள்வி கேட்கத்தான் அனுமதித்தேன். சிறிய சொற்பொழிவு ஆற்றலாகாது. ஆகவே, அருள்கூர்ந்து கேள்வியைக் கேட்கவும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நெருங்கிய உறவினருடைய வருவாயை எடுத்துக்கொள்ளாமலும், எம்.எல்.ஏ., எம்.பி., எம்.எல்.சி., போன்றவர்களுடைய சம்பளத்தை ஸ்காலர்ஷிப் சம்பந்தப்பட்டவற்றிற்கு எப்படி அலவன்ஸாகக் கருதுகிறார்களோ அதேபோன்று இந்த பென்ஷன் அளிக்கின்ற நோக்கிலும் அதை அலவன்ஸாகக் கருதுவதற்கான முறையில் அந்த விதியைத் திருத்த முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் அங்கத்தினருடைய கருத்து தியாகிகள் எம்.எல்.ஏ., எம்.எல்.சி., எம்.பி-யாக இருக்கின்றவர்களுக்கும் பென்ஷன் தரப்படவேண்டுமென்று